**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 8 /2018**

நாள்: 28.10.2025.

பெயர்: சரவணன் (பி.வா.சா.1) த/பெ: கருணாநிதி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

1. எனக்கு ரஞ்சிதம் மற்றும் சத்தியபாமா என்ற சகோதரிகள் உள்ளனர். தாவா சொத்திற்கு வடமேற்கில் **சர்வே எண் 345/16** என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், **சர்வே எண் 345/16** ஆகியவைகளுக்கு வடபுறத்தில் கீழ்மேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் மேல்புறத்தில் மரங்கள் இருந்ததா என்றால் இல்லை. வாதி கடந்த 25 வருடங்களாக ஆண்டிமடத்தில் Medical shop வைத்துள்ளார் என்றால் Medical shop வைத்துள்ளார் ஆனால் 25 ஆண்டுகளாக வைத்துள்ளாரா என்றால் இருக்கலாம். தாவா சொத்து இருக்கும் கிராமத்திற்கும் ஆண்டிமடத்திற்கும் 5 கி.மீ இடைவேளி இருக்கும் என்றால் 3 கி.மீ தான் இருக்கும். வாதி அருகாமையில் இருப்பதால் தாவா சொத்தை வாதியின் தாயார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் தாயாரோடு வாதி உடனிருந்து அவரை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கில் என்ன ஆதரவின் அடிப்படையில் எதிரிடை கோரிக்கை நான் கோரியுள்ளேன் என்றால் 1937, 1940 ஆண்டைய கிரைய பத்திரங்கள் மற்றும் வீட்டுவரி ரசீதுகள் ஆகியவற்றின் அடிப்படையில். மேற்படி 1937, 1940 ஆண்டைய கிரைய பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய பத்திரங்களை எதிரிடை கோரிக்கைக்காகதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 1940 பத்திரம் **பி.வா.சா.ஆ.1** ஆகவும், 1937 பத்திரம் **பி.வா.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2** ஆகிய ஆவணங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ல்** கண்ட வாசகங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2** ஆகிய ஆவணங்கள் சர்வே எண் குறிப்பிட்டு எழுதபடவில்லை என்றால் சரிதான்.

மேற்படி ஆவணங்களில் உள்ள சொத்தின் அளவுகள் காலடி அளவுகளில் எழுதபட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஒரு காலடி அளவு என்பது 8 அங்குலம் என்றும் கூறலாம், 9 அங்குலம் என்றும் கூறலாம் என்றால் சரிதான். எதிரிடை கோரிக்கையில் கோரியுள்ள சொத்தினை நான் அளந்து பார்த்துள்ளேன் என்றால் சரிதான். எப்போது அளந்தேன் என்றால் 2019 ம் ஆண்டில் அளந்தேன். எதிரிடை கோரிக்கையில் கோரியுள்ள சொத்தின் கீழ்மேல், தென்வடல் அளவுகள் என்னவென்றால் எனக்கு தெரியாது. **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2** ஆகிய பத்திரங்களின் சொத்து விவரத்தில் நான்கெல்லை விவரத்தில் கூறியுள்ள நபர்கள் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ல்** கண்டுள்ள சொத்துகளுக்கு எனது பெயரிலோ எனது தந்தை பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரிதான். **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ல்** உள்ள சொத்துகள் தான் எதிரிடை கோரிக்கை சொத்துகள் என்று தொடர்புபடுத்த ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. **பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2** உள்ள சொத்துகளுக்கும் எனது எதிரிடை கோரிக்கை சொத்துகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள **பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.8** வரையுள்ளான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தபட்டது அல்ல என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.8** வரையான ஆவணங்கள் தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள **சர்வே எண் 345/16** ற்கான ஆவணங்கள் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.9** தாவா சொத்திற்கோ எதிரிடை கோரிக்கை சொத்திற்கோ சம்மந்தபட்டது அல்ல என்றால் சரிதான். இவ்வழக்கில் எனது எதிரிடை கோரிக்கைக்கு ஆவணங்கள் இருப்பது போன்று தோற்றத்தை காட்டுவதற்கு இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத **பி.வா.சா.ஆ.9 ஐ** தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் முதலில் எதிர் வழக்குரை தாக்கல் செய்த போது எதிரிடை கோரிக்கை கோரவில்லை என்றால் சரிதான். நான் முதலில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இடையூறு செய்யவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதலில்

தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு பின்னிட்டு தாக்கல் செய்த கூடுதல் எதிர் வழக்குரை மற்றும் எதிரிடை பாத்தியத்தில் கோரியுள்ள பரிகாரம் சட்டபடி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

5. நான் எதிரிடை கோரிக்கையில் கோரியுள்ள 850 ச.அடி சொத்து எனக்கு பாத்தியபட்டது இல்லை என்றாலும் எனது அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிடை பரிகாரத்தில் கோரியுள்ள சொத்திற்கு சொத்து விவரம் இல்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள எதிரிடை கோரிக்கை பரிகாரம் சட்டபடி செல்லதக்கது அல்ல என்பதால் அதனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் தாவா படி வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/க.சரவணன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.